**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 89/2021**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 சிவக்குமார் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 12.06.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

வாதி சங்கப்பிள்ளையை தெரியும். அவர் எனக்கு தாத்தா உறவுமுறை ஆகும். பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவு என்றால், எனது பாட்டி, தாயார் மற்றும் அவரது உடன்பிறந்தவர்கள். வாதியின் தகப்பனார் பெயர் ஓந்தான். எங்கள் பூர்வீக சொத்தை தற்போதுவரை நாங்கள் பாகம் செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை வாதியின் தகப்பனார் கிரையம் வாங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த ஆவணம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஓந்தான் கிரையம் வாங்கிய சொத்தில் எங்களுக்கு உரிமை இருக்கிறதா என்றால் இருக்கிறது. ஓந்தான் எனக்கு என்ன உறவு என்றால் எனக்கு முப்பாட்டன் உறவு வரவேண்டும். ஓந்தானுக்கு வாரிசு இருக்கிறார்களா என்றால் வாதிதான் வாரிசு ஆவார். வேறு யாராவது இருக்கிறார்களா என்றால் தெரியவில்லை. ஓந்தான் கிரையம் வாங்கிய சொத்தில் வாதிக்குதான் உரிமை உள்ளது என்றால், எங்களுக்கும் உரிமை உள்ளது. தவறுதலாக வருவாய்துறையில் எங்கள் பெயரில் ஏற்பட்ட பட்டாவை வைத்துக்கொண்டு வாதியின் சொத்தில் உரிமை கொண்டாடுகிறோம் என்றால் சரியல்ல.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R.தமிழரசி
**Principal District Munsif**
**Kulithalai.**